# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC .No.98/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாசம் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 7th ஏப்ரல் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2021 ம் ஆண்டு மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 17.08.2021ம் தேதி மொடக்குறிச்சி காவல் நிலைய தலைமை காவலர் 397 பாலாஜி என்பவர் காவல் நிலைய குற்ற எண். 206/2021, சட்ட பிரிவுகள் 279, 337 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை நான் பெற்றுக் கொண்டு 17.08.2021 ம் தேதி காலை 9.15 மணிக்கு நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்றும், சாட்சிகள் ராஜா, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

2. சாட்சிகள் குமார், சூர்யா, ஜிபேர் அகமது, அக்பர் அலி, காந்திராஜன், ராஜா, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ நடந்து உண்மை என தெரிந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி ஹரிஹரன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு 06.09.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.07 17:15:28 +0530

விடுவிக்கப்பட்டார். விபத்தில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 33 BP 6757 என்ற ராயல் என்பில்டு வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக அனுப்பி வைத்தேன். நான் பின்னர் பணி மாறுதலில் சென்றததால் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.பிரபாகரன் வசம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த சோலார் டூ முத்தூர் சாலை மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். அதிகபடியான இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின் போது புகார்தாரர் ஓட்டிவந்த வாகனத்திற்கு பதிவு சான்றிதழ், வாகன காப்பீடு மற்றும் புகார்தாரருக்கு ஓட்டுநர் உரிமம் எதுவும் இல்லை என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதேபோல் புகார்தாரர் எதிரிக்கு முன்பாக சென்ற நான்கு சக்கர வாகனத்தை பற்றி எவ்வித தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் 2 நாட்கள் கழித்து தான் நான் சென்றேன் என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரி, புகார்தாரர் இருதரப்பிற்கும் காயம் ஏற்பட்டது என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

2. சம்பவ இடத்திற்கு சற்று முன்பாக வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னிட்டு யார் யார் முதலுதவி செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த இடமானது இருட்டான பகுதி என்றால் சரிதான். நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மை சம்பவத்தை மறைத்து மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.07 17:15:33 +0530